# பிபில பிரதேச சபை

# மொனறாகலை மாவட்டம்

----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூன் 05 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூலை 14 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 22 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, பிபில பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் வர்த்தக கட்டடத்திற்காக ரூபா 6,200,000 இற்கான தொகையொன்று உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெறுவதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 5,549,570 தொகையொன்றினை பெறவேண்டிய மூலதன உதவி ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 1,200,000 பெறுமதியான 02 கட்டடங்களின் பெறுமதியினையும் மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 2,430,801 பெறுமதியான சபை வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வாகன தரிப்பிடக் கட்டடத்தின் பெறுமதியினையும் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையினால் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 1,153,779 இற்கான செலவுகளுக்காக கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

22 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 161,761,592 ஆகக் காணப்பட்டதுடன் கணக்கீட்டு குறிப்புக்கள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 187,188,696 ஆகக் காணப்பட்டது.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்தின் மீதி ரூபா 1,144,694 தொகை ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,645,992 இற்கான 02 சொத்து விடயங்களையும் ரூபா 58,837,660 இற்கான 03 பொறுப்பு விடயங்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------

1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 19(1)(i) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூலமான பூர்வாங்க அங்கீகாரம் இன்றி பிரதியீட்டு சுகாதார தொழிலாளர் பதவிக்காக நபர் ஒருவர் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 130,080 இற்கான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 43,192,288 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,959,401 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய குறைதல் ரூபா 49,151,689 ஆகும்.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

--------------------------------------------------------

முன்னைய ஆண்டுடன் சார்பிளான மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 49,151,689 இற்கான குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பான பகுப்பாய்வு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| மீண்டுவரும் வருமானம் | 2013 | 2014 | முரண் | |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| வீதவரி | 5,268,501 | 10,271,950 | 5,003,449 | |
| வாடகை | 5,928,581 | 291,051 | (5,637,530) | |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 618,605 | 167,762 | (450,843) | |
| சேவைகளுக்கான கட்டணம் | 439,561 | 912,305 | 472,744 | |
| தண்டப்பணம் மற்றும் எழுத்தாணைக் கட்டணம் | 891,402 | 771,334 | (120,068) | |
| ஏனைய வருமானங்கள் | 2,740,453 | 3,248,048 | 507,595 | |
| வருமான உதவி | 17,350,964 | 20,063,826 | 2,712,862 | |
| | | | --------------- | 2,488,209 |
| **மீண்டுவரும் செலவுகள்** | | | | |
| சம்பளங்கள் மற்றும் படிகள் | 19,381,052 | 13,205,291 | 6,175,761 | |
| பிரயாணச் செலவுகள் | 675,302 | 1,232,699 | (557,397) | |
| வழங்கல் மற்றும் உபகரணங்களும் | 2,452,901 | 2,398,982 | 53,919 | |
| மூலதன சொத்துக்களின் திருத்தமும் பராமரிப்பும் | 1,315,090 | 2,243,687 | (928,597) | |
| போக்குவரத்து தொடர்பாடல் தேவைகள் மற்றும் சேவைகள் | 1,914,597 | 1,651,035 | 263,562 | |
| வட்டி செலுத்தல் பங்கு இலாபம் மற்றும் மிகை ஊதியம் | 1,387,031 | 53,234,463 | (51,847,432) | |
| உதவி நிதி பங்களிப்பு நிதி மற்றும் மானியம் | 51,482 | 4,327 | 47,155 | |
| ஓய்வூதிய, ஓய்வூதிய நலன்கள் மற்றும் பணிக்கொடை | 101,211 | 4,948,080 | (4,846,869) | |
| | | | ------------------ | |
| | | | | (51,639,898) |
| மீண்டுவரும் வருமாத்தில் குறைதல் | | | | (49,151,689) |
| | | | | ======== |

2.3 வருமான நிருவாகம்

-------------------------------

2.3.1 நிலுவை வருமானம்

-------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 46,513,360 இற்கான நிலுவை வருமானத்தினை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.3.2 வீதவரி

----------

(அ) 2010 ஆண்டு முதல் முன்னைய ஆண்டு வரை நிலுவை வீதவரியாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 12,709,961 தொகையினை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதித் திகதி அளவில் 06 அரச நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 209,382 இனை அறவீடு செய்வதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.3.3 வாடகை

------------

(அ) 2014 ஜூலை 28 திகதியில் இலக்கம் எம்ஓ/ஆர்பீ/363 கொண்ட பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி பிபில பொதுச் சந்தையின் 67 கடைகள் 2013.01.01 முதல் 03 வருட காலப்பகுதிக்காக வாடகைக்கு கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் வாடகைக்கு கொடுக்கப்படாமையால் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 6,566,400 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

(ஆ) 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 23 கடைகளின் வாடகையை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக பொதுச் சந்தையின் மாட்டிறைச்சிக் கடை ரூபா 1,521,079 இற்கான தொகை ஒன்றிற்கு வாடகைக்கு கொடுப்பதற்காக தீர்மானிக்கப்பட்டு 03 சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் கோறப்பட்டிருந்த போதும் கூறுவிலைகள் ஏதும் சமர்பிக்கப்பட்டிக்கவில்லை எனினும் 2014 பெப்ரவரி 10 திகதி ஒரு விண்ணப்பதாரர் ரூபா 1,100,000 தொகைக்கு மாட்டிறைச்சி கடையை பெற்றுத் தருமாறு எழுத்து மூலமாக விண்ணப்பித்திருந்த போதும் மீளாய்வாண்டு ஜனவரி 17 ஆந் திகதி சபையினால் கூறுவிலைகளை கோறப்பட்டாமல் ஆதனங்களை வாடகைக்கு கொடுக்க கூடாது என எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக மீளாய்வாண்டிற்காக ரூபா 1,100,000 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழக்க நேரிட்டிருந்தது.

2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 5,644,374 இற்கான தொகையொன்று பின்வருமாறு பெறவேண்டியிருந்தது.

| | ரூபா |
|---|---|
| நீதி மன்றத் தண்டப்பணம் | 3,792,912 |
| முத்திரைக் கட்டணம் | 1,851,462 |

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

----------------------------------------------

(அ) மின்சக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் வீதி விளக்குகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் வீதி விளக்குகள் செயற்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்காக சேவை வழங்குனர் ஒருவராக செயற்பட வேண்டும் எனினும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 301,270 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் வீதி விளக்குகள் பொருத்தும் போது பொருத்தும் முறை, பொருத்த வேண்டிய விளக்குளின் வகை, எண்ணிக்கை பற்றிய விபரங்கள் என்பன பதிவு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 03 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 12,950,000 இற்கான 13 நிர்மாண வேலைகளுக்கான செயற்திட்டங்கள் பல்வேறு காரணங்களினால் சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிரந்தர பாதை தொழிலாளர் இருவரை குறிப்பிட்ட கருமத்திற்காக ஈடுபடுத்தப்படாமல் அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தற்போது பதவி வெற்றிடங்கள் காணப்படாத போதும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் கடமைகள் சாட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது நூலக உதவியாளர், சுகாதாரத் தொழிலாளர்கள் மற்றும் சாரதிகள் பதவிகளுக்கான அமைய அடிப்படையில் 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது ஆட் சேர்க்கப்பட்டு கடமையாற்றிய மூன்று ஊழியர்கள் நிரந்தர சேவைக்கு நியமிக்கப்பட்டிருந்த போதும் அந்த அலுவலர்களை சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---------------------------------------------------------------------

2009 மாகாண குறிப்பிட்ட மானியங்களின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் அமுல் நடத்துவதற்காக ரூபா 1,484,376 தொகை ஒன்றும், சபை நிதியத்தில் இருந்து ரூபா 94,915 செலவு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் கீழ் சேதனப் பசளை உற்பத்தி விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,579,291 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தினை அமுல் நடத்தியிருக்கவில்லை. குப்பைகளை அகற்றும் விடயம் சுற்றாடலுக்கு சார்பான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையின் பிலிஸரு செயற்திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் இந்த செயற்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக பிரேரணை தயாரிக்கப்பட்டு சமர்பித்திருந்த போதும் அவை விரைவாக செயற்படுததப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 189,460 இற்கான மேலதிக செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு புவக் பலே இடத்தில் குப்பைகள் போடுவதற்கான குழிகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்